RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s32

OPEN ACCESS

# “பாம்புகள்” புதினத்தில் மாந்தவுருவகம்

**செ. ஸ்டாலின் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி), தாம்பரம், சென்னை-600059, தமிழ்நாடு, இந்தியா

# Anthropomorphism in Paambugal Novel

**S. Stalin [a, *]**

[a] Department of Tamil, Madras Christian College (Autonomous), Tambaram, Chennai-600059, Tamil Nadu, India

* Corresponding Author:
stalin.s@mcc.edu.in

Received: 13-04-2021
Revised: 30-03-2022
Accepted: 11-04-2022
Published: 27-05-2022

Check for updates

**ABSTRACT**

Literature is the form which is formed or created on the theme of own life experiences and social experiences from time to time. They move the events from one period to the next and the literature travels along with them. The Historical events are one among them. The short novel "PAAMBUGAL" was written based on the event that took place in the 20th century. Techniques of storytelling is studied in terms of story analytic methods and historical methods. It is found that anthropomorphism of Tamil literature differs from that of Western theory. It is inferred that, though anthropomorphism technique is used but not fulfilled in the text.

**Keywords:** Anthropomorphism, Paambugal, Social Experiences Palamalai

## முன்னுரை

மனித வாழ்வியல் நடத்தைகளைப் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்துவது மனிதர்களின் இயல்பு. இலக்கியமாகவும் நிகழ்த்து கலைகளாகவும் நுண்கலைகளாகவும் அவை பரிணமிக்கின்றன. கருப்பொருளை விளக்கி, தீர்வை சொல்லுவதும் அடையாளப்படுத்தும் ஆவணப்படுத்துவதுமாகிய முறைமைகளில் கருத்துகளைப் புலப்படுத்துவதே மேற்கூறிய வடிவங்களில் நோக்கமாகும். கவிஞர் த. பழமலயின்” பாம்புகள்” எனும் குறும்புதினம் அவ்வகையில் அமைந்ததே. இப்புதினத்தின் கதைமாந்தர் படைப்பு கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. ஏனெனில் நாட்டுப்புறக் கதைகளிலும் பஞ்சதந்திரக் கதைகளிலும் அமைந்து வருவதைப் போன்று இதிலும் கதைமாந்தர் படைப்பு அமைக்கப்பட்டுள்ளது. அதாவது மனிதர்கள் எனும் உயர்திணையை அஃறிணையாகப் படைப்பது. அதுவும் அவரவரின் குணத்திற்கு ஏற்ப அமைத்து, தான் சொல்ல வந்த கதையைச் சொல்லி, வேறு ஒரு பரிணாமத்திற்குக் கொண்டு செல்கிறார் பழமலய்.

## கதைக்கரு

1975 ஜூன் 25 முதல் 1977 மார்ச் 21 வரை உள்ள 21 மாதங்கள் இந்திய நாட்டில் அவசரநிலை அறிவிக்கப்பட்டு நடைமுறையில் இருந்தது. விடுதலைக்குப் பின் மக்களாட்சி முறையில் இந்திய வரலாற்றின் முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. நீதிமன்றம் உட்பட அனைத்து அமைப்புகளும் மைய அரசின் கட்டுப்பாட்டில் இருந்தன. அவசர நிலை என்ற பெயரில் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு இருந்தன. நாளிதழ்கள் உட்பட அனைத்தும் தணிக்கை செய்யப்பட்டு வெளிவந்தன என்பதெல்லாம் வரலாறு.

தன் அதிகாரத்தை அளவுக்கு மீறிய வகையில் வெளிக்காட்ட வாய்ப்புகளை தானே உருவாக்கிக்கொண்ட அமைப்புகளும் தலைமைகளும் வளர்ந்தன. அவ்வாறு அவசரநிலை காலகட்டத்தில் அதிகாரத்தின் வீரியத்தால் பாதிப்புக்கு உள்ளான ஒருவரின் அனுபவமே கதைக்கான கருவாக இருக்கின்றது. களமாக இருப்பது, ஒரு அரசு கல்லூரி என்பது வியப்புக்குரியது.

இயல்பாக 1970-களில் நல்ல நிலைமையிலேயே செயலாற்றி வந்த அரசு கல்லூரிகளில் அவசரநிலை எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தின என்றும் மாணவர்களின் மனநிலையும் பேராசிரியர்களின் மனநிலையும் எத்தகைய மாற்றங்களுடன் இயல்புக்கு மாறியும் மீறியும் இருந்தன என்றும் விவரிக்கிறது பாம்புகள் புதினம்.

## கதைமாந்தர் படைப்பும் மாந்தவுருவகமும்

பழமலய், எதையும் நேரடியாகச் சுருக்கமாகச் சொல்லும் இயல்புடையவராதலில் இப்புதினத்தின் கதைமாந்தர் படைப்பில் வேறுபாட்டைக் காட்டியுள்ளார். எந்தவொரு கதைமாந்தருக்கும் மனிதர்களுக்கு இடும் பெயர்கள் இல்லை. மாறாக, குணங்களின் அடிப்படையில் உருவகமாக மனிதர் அல்லாத பிற உயிரினங்களின் பெயர்களை அதாவது அஃறிணைப் பெயர்களை வைத்து படைத்துள்ளார். இத்தகைய உத்தி முறையை மாந்தவுருவகம் என்று அழைப்பர்.

Anthropomorphism என்பது ஆங்கிலப் பதம். “The attribution of human characteristics or behaviour to a god, animals or objects”. இதனை ’மனக்கோட்புகுத்தன் கொள்கை’ என்று பொருள்படுத்துகிறது ஆக்ஸ்போர்ட் அகராதி (Park, 2007; Urquiza-Haas & Kotrschal, 2015).

அதாவது மாந்தர்களின் தனிப் பண்புகளை பிற உயிரினங்கள் அதாவது உயிரற்ற பொருட்களின் மீது சாற்றிக் கூறுவது ஆகும். மேலும் மாந்தவுருவகம் என்பது மனிதர்களின் சிந்தையில் ஆழமாக அமைந்துள்ள உருவகப் பகுப்பாய்வு முறையின் வெளிப்பாடு என்று அறிஞர்களால் கருதப்படுகிறது.

## பாம்புகள்- மாந்தவுருவகம்

மனித எண்ணங்களை எடுத்துக்காட்டவும் குணங்களுக்கு ஏற்ப உயிரினத்தோடு ஒப்பிட்டு எதிர்வினையாற்றும் பழமலய்,

’ஆதிசேடன், கருநாகம், பாம்புகள், நல்ல பாம்புகள், கீரிப்பிள்ளை, நரி, ஊமைக் கோட்டான், ஆமை, தவளை, காக்கை, சிட்டுக்குருவி, ஆந்தை, கருடன், சடைநாய், நாட்டுநாய், சீமைநாய், பெருச்சாளி, கிளி, குரங்கு, சிலந்தி, சிங்கம், புலி, சிறுநரி, கடற்பறவை, ராஜாளி, சிட்டுக்குருவி என 27 வகையான உயிரினங்களின் பெயர்கள் மனிதக் கதைமாந்தர்களுக்கு அவரவர் குணத்திற்கு ஏற்பவும் செயலுக்கு ஏற்பவும் கொடுத்துள்ளார்.

அவசரநிலை காலகட்டத்தில் ஒரு அரசு கல்லூரிக்கு முதல்வராக வருபவரை ’கருநாகம்’ என்ற பெயரில் அடையாளப்படுத்துகிறார் ஆசிரியர். குறிப்பாக, வஞ்சம் தீர்க்கும் எண்ணம் உடையவராகவும் அனைவரையும் விட அதிகாரம் உடையவர் என்ற எண்ணம் உடையவராகவும் இயல்பான மனிதநேயமற்றவராகவும் காட்டப்படுகிறார். புதிய விதிகளை அறிமுகப்படுத்தி, பிறர் செயல்படுத்த கட்டாயப்படுத்துவது இவரின் முதல் பணி. செயலாற்றாதவர்களுக்கு மெமோ கொடுத்து பயமுறுத்துவது இவரின் நோக்கமாகவே இருப்பதாகவும் இவரால் அனைவரும் மன உளச்சலும், பய உணர்வும் பாதுகாப்பின்மையும் கொள்வதாகக் காட்டப்படுகிறது. புதினம் முழுக்க இவரே மூலப்பொருளாக, இயங்கும் இயக்கும் பொருளாக உள்ளார். உள்ளபடி எமர்ஜன்சியின் மறு உருவமாகப் படைக்கப்பட்டுள்ளார்.

## பேராசிரியர்களின் மாந்தவுருவாக்கம்

கல்லூரிப் பேராசிரியர்கள் அரசு ஊதியம் பெற்று பொறுப்பற்ற முறையில் பணியாற்றுவதையும் சிலர் மாணவர் நலன், கல்வி வளர்ச்சி, ஆய்வு ஆகியவற்றோடு இருப்பதையும் உருவகப்படுத்துகிறார். தலைமைக்கு இணக்கமாக இருப்பவர்கள், அதிகாரத்திற்கு வர முயல்பவர்கள், அலுவலக ஊழியர்கள், பழிதீர்த்தல் மற்றும் சண்டையிடுதல் ஆகியவற்றில் ஈடுபடும் பேராசிரியர்கள் ஆகியோருக்கு உருவகப்படுத்தப்படுகின்றனர்.

'பாம்புகள்' என்று கல்லூரியில் பணியாற்றும் ஒரு சில பேராசிரியர்கள் குறிப்பிடப்படுகின்றனர். சில பாம்புகள் முதல்வருடன் இணக்கமாக இருப்பதாகவும் ஒன்றுமே தெரியாது ஆனால் தெரிந்தது போல பாவனைக் காட்டுவதாகவும் வெளிப்படுத்துகிறார். முறையற்ற முறையில் பணியில் சேர்ந்த ஒரு ஆசிரியர் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முதல்வருடன் இணக்கமாகி விடுகிறார். அவர் என்ன சொன்னாலும் தலையாட்டும் இவரை 'வாலாட்டும் நாய்' என உருவகப்படுத்துகிறார்.

உயர்கல்வி ஆசிரியர், மாணவர்களை ஒழுங்குபடுத்தும் வேலைகளுடன் ஆசிரியர்கள் சரியான நேரத்திற்கு வகுப்பிற்குச் செல்கின்றனரா? வகுப்பெடுக்கின்றனரா? என்ற தனக்கு இடாத வேலையும் செய்கிறார். யாரிடமும் பேசாமல் தன் செயல்களால் காட்டும் இவரை 'ஊமைக்கோட்டான்' என அடையாளப்படுத்துகிறார்.

"நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால் கிடைக்கு (ஆட்டுப்பட்டி) எட்டாடு கேட்கும்" என்றும், "சிட்டுக்குருவி சட்டாம்பிள்ளை என்றால் சும்மா இருப்பவர்கள் தலையிலும் குத்தும். இது நரியும் அல்ல. சிட்டுக்குருவியும் அல்ல. கோட்டான் கூட இல்லை. ஆந்தை. தொடர்ந்து இவரின் போக்கு முதல்வருக்குப் கருணாவிற்குப் பிடிக்காமல் போனது." என்றும்

ஒவ்வொரு நேரத்திலும் தன் இயல்பை மாற்றி கொண்டிருப்பவரை பல உயிரினங்களோடு உருவகப்படுத்துகிறார் (Palamalai, 2003).

பாம்பிற்கும் கீறிக்கும் ஆகாது என்பர். ஒரு பேராசிரியராகக் காட்டப்படுகிறார். ஆந்தையினால் பாதிக்கப்பட்டவர். காக்கைகளும் ஆந்தையால் பாதிக்கப்பட்டிருந்தன.

முதல்வருக்கு எதிராக பேசும் காக்கைகள், பேராசிரியர் ஒரு 'மெமோ' வந்தால் பறந்துவிடும். துணிவற்றவையாக இருக்கின்றன என்கிறார்.

புதிய முதல்வர் கொண்டு வரும் கட்டுப்பாடுகளைக் கடைபிடிக்க முடியாத நிலையில் கீரிப்பிள்ளை,

"டையாம்! மொட்டை! சுருக்குப் போடத் தெரியவில்லை. பசங்க வேற கிண்டல் பண்ணுவாங்க, எல்லாம் நீ தான்பா" என்கிறார் (Palamalai, 2003).

வயது முதிர்ந்த பேராசிரியர் 'கருடன்'. இளைஞர்கள் மற்றும் எதிர்காலத்தின் மீது நம்பிக்கையற்றவர். 'மயில்' தன் அலகால், கட்டுப்பாடுகளால் தங்களைத் துன்புறுத்தும் முதல்வரை கொத்துவது போல பாவனைச் செய்கிறது. முதல்வரிடம் தூது சொல்லும் உயிரியாக 'நத்தை' படைக்கப்பட்டுள்ளது.

பழமைவாதியான ஆங்கில பேராசிரியர், 'பழைய பெருச்சாளி' என வர்ணிக்கப்படுகிறார். முதல்வரின் போக்கினால் கோபப்படுபவரை 'சடைநாய்' என அடையாளப்படுத்துகிறார்.

இவர், "முதல்வர் வழுக்கைத்தலை. எனவே தான் தலைமயிர் நிறைய இருக்கும் தன் மீது எரிச்சல் அடைகிறார்" என்கிறார் (Palamalai, 2003).

பெண் பேராசிரியைகள் 'கிளிகள்' என உருவகப்படுத்தப்படுகின்றனர். ஆடவர் கல்லூரியான இக்கல்லூரியில் இவர்களால் தான் மாணவர்கள் பலரும் வருகைப்பதிவு செய்கின்றனர் என்றும் ஆசிரியர்களுமே உற்சாகம் அடைகின்றனர் என்றும் கதை போக்கில் சொல்லிச் செல்லுகிறார். ஆனால் இவர்களின் மகிழ்ச்சியான போக்கினை அறிந்த முதல்வர், பெண் ஆசிரியைகளை வெவ்வேறு இடங்களுக்கு மாற்றல் ஆகும்படி செய்துவிடுகிறார். இதனை,

“ஒருநாள் பார்க்கிறோம் 'கிளிகள்' ஒன்றன்பின் ஒன்றாக தொங்கிய முகங்களுடன் விடை பெறுகின்றனர். மாணவர்களும் உடன்சென்று வழியனுப்பி வைக்கின்றனர். அன்பளிப்பாக ஏதோதோ வாங்கித் தருகிறார்கள். ஆண் பேராசிரியர்களாகிய எங்கள் மனதில் ஒரு பொறாமை கூட வந்தது.

”பெண் ஆசிரியர்களின் சூழலில் மாணவர்கள் ஒழுங்காக முகங்களையாவது கழுவிக்கொண்டு வகுப்புகளுக்கு வருகிறார்கள். முதலாவதாக ஆண்பிள்ளைகள் போல நிமிர்ந்து நடக்க கற்றுக் கொள்கிறார்கள். ஆண்கள் மட்டும் பயிலும் வனத்தில் இந்த பேராசிரியைகள் தாம் பாலையில் சோலைகள்” என்று கிளிகள் போற்றப்படுகின்றனர் (Palamalai, 2003).

ஆசிரியர் வேலையை விட்டுவிட்டு வேளாண்மை பார்ப்பது, வீடு கட்டுவது, வேறு வியாபாரம் என்னென்ன செய்யலாம் என்று யோசனைப் பண்ணுவது என்று இருப்பவருக்கு 'நரி' என்று பெயரிடுகிறார். பலவேளைகளில் நரித்தனமான வேலைகளையும் இவர் செய்வதால் இப்படிக் காட்டப்படுகிறார்.

துறைத் தலைவர்களை 'நல்ல பாம்புகள்' என உருவகப்படுத்தும் ஆசிரியர், எல்லாம் தன்னால் தான் நடக்க வேண்டும் என்றும் நடப்பதெல்லாம் தன்னால் தான் நடக்கிறது என்றும் தான் தான் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டிருக்கிறேன் என்ற மனநிலையுடன் இருக்கும் ஒரு துறைத்தலைவரை 'ஆதிசேடன்' என அடையாளப்படுத்துகிறார்.

அனைவரையும் செயல்படாமல் வைத்து விட்டு தான் மட்டும் மாணவர்களுடன் மேலிடத்தில் இணக்கமாக, நட்பாக இருப்பது போலவும் தான் ஒரு 'பெரிய அறிவு ஜீவி' எனவும் சிறிது காலத்திலேயே இவைகளெல்லாம் தவறான பிம்பங்களாக

உடைபடுபவரை 'குரங்கு' என உருவகப்படுத்துகிறார் ஆசிரியர். ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்ட பின் தனிமைப்படுத்தப்படுகிறார் குரங்கார்.

யாராவது நம்மிடம் வந்து சிக்குவார்களா? ஏதேனும் தகவல் இருக்காதா? அவற்றால் நமக்கு மகிழ்ச்சி உண்டாகாதா? எனக் காத்திருக்கும் ஆசிரியருக்கு பெயர் 'சிலந்தி'.

முதல்வரை மாற்றும் முயற்சியில் களம் இறங்கும் 'தவளை', 'நாட்டு நாய்', 'சீமை நாய்' ஆகியன பிற உயிரினங்களிடம் கடிதத்தில் கையெழுத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுகின்றன எனவும் அதைப் பற்றி ஓரிடத்தில் பேசியதைக் கருநாகத்திடம் (முதல்வரிடம்) தவளை கக்கிவிட்டதையும் அதனை அத்தவளையே பிறரிடம் கூறுகிறது எனவும் வெளிப்படுத்துகிறார்.

இஸ்லாம் சமயத்தவரான ஒரு ஆசிரியரை 'வெள்ளைக்காக்கை' என்கிறார் ஆசிரியர். நல்ல மனம்படைத்தவரும் இறைநம்பிக்கையாளரின் மீதும் அதிகாரம் பாய்கிறது. இதனால் அவர்களுக்குப் பயந்து விடுகிறார். இதனைக் கூறவரும் ஆசிரியர்,” வெள்ளைக்காக்கை இறைநம்பிக்கையாளர். முகமது நபிகளார் உருவ வழிபாட்டை ஒழித்தவர். என்றாலும் இந்தப் பாய், 'பாம்புகளை' வணங்குகிறார். அவை பதவிகளில் இருக்கின்றனவே” என வருந்துகிறார் (Palamalai, 2003).

முதல்வரான கருநாகத்திடம் 'யானை, சிங்கம், புலி, நரி' ஆகிய வலிமைமிக்கவைகள் எனக் கருதும் பேராசிரியர்கள் எல்லாம் பயப்படுகின்றனர். ஏனென்றால் தற்போதைய சூழ்நிலை அப்படி. எங்கே தங்களுக்கும் மெமோ கொடுக்கப்பட்டு விடுமோ என்ற அச்சமே காரணமாகக் கூறப்பட்டுப் புதினம் முடிகிறது.

## முடிவுரை

கதையின் போக்கு, மாற்றலாகி வரும் முதல்வரின் அதிகார நீட்சியும் அதனால் பாதிக்கப்படும் பேராசிரியர்கள் பற்றியும் அமைந்திருக்கிறது. அவசர/நெருக்கடி நிலையில் கொண்டுவரப்பட்ட 20 சட்ட முன்வடிவைப் போன்றே கல்லூரி முதல்வரும் கல்விச் சூழலுக்கு பொருந்தாத பல கட்டுப்பாடுகளை விதிக்கிறார். இப்புதினத்தின் ஆசிரியர் இச்சூழலில் பாதிக்கப்பட்டவராகத் தன்னைக் காட்டிக்கொள்கிறார். பொதுவாக மேலைநாடுகளில் அதிகாரத்திற்கு எதிர்வினையாற்ற பயன்படும் இலக்கியங்களில்

கதைமாந்தர் உருவாக்கம் முதன்மையானது. இவ்வுத்தி மனக்கோட்புகுத்தன் கொள்கை எனவும் அழைப்பர். ஆசிரியரும் மனதுக்குள் கிடைந்த நெருக்கடிநிலை அனுபவத்தை இலக்கிய வடிவில் ஆக்கும்போது நேரடி கதைமாந்தர் படைப்பில் புது முயற்சியாக அந்த உருவகத்தைக் கையாண்டுள்ளார். பல இடங்களில் நெருக்கடி அவசர நிலையைத் (எமர்ஜென்சியை) தொட்டுக் காட்டும் ஆசிரியர், தன் நிலைப்பாட்டை மாணவர்கள் நலன் சார்ந்த ஒன்றாகக் காட்டுகிறார். ஆனால் ஒவ்வொரு கதைமாந்தரையும் உருவகப்படுத்தும் போது தன்னை எதுவுமாகக் காட்டவில்லை. அதாவது உருவகப்படுத்திக் கொள்ளவில்லை. மேலைநாட்டின் மாந்தவுருவகத்திற்கும் இப்புதின மாந்தவுருவாக்கத்திற்கும் உள்ள வேறுபாடாக இதனைக் கொள்ளமுடியும்.

## References


Palamalai, T., (2003) Paambugal, Mithra Arts & Creations, Chennai, Tamil Nadu, India

Park, C., (2007) A Dictionary of Environment and Conservation, OUP Oxford, United Kingdom.

Urquiza-Haas, E.G., Kotrschal, K., (2015) The mind behind anthropomorphic thinking: attribution of mental states to other species, Animal Behaviour, 109, 167-176. https://doi.org/10.1016/j.anbehav.2015.08.011



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License